**பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்**
சினாட் செக்ரடேரியட்,
செயின்ட் தாமஸ் கம்யுனிடி,
திருவல்லா, கேரளா, இந்தியா 689 103
Ph: 0469 2630654
WWW.bec.org
email: info@bec.org

**பிலிவர்ஸ் ஈஸ்டர்ன்**
சர்ச்

TAMIL- ENCYCLICAL

EN/04/24 மே 28th, 2024

**என் அன்பு சகோதரர்களாகிய பேராயர்கள், குருமார்கள் மற்றும் சபை விசுவாசிகளுக்கு.**

பிதாவாகிய தேவனாலும், நமது கர்த்தராகிய குமாரனாகிய கிறிஸ்த்துவினாலும், எப்போதும் நம்மோடே இருக்கும் பரிசுத்த ஆவியினாலும் இரக்கமும், சமாதானமும் உங்களோடு இருப்பதாக.

நமது அன்புக்குரிய ஆவிக்குரியத் தந்தை, மேன்மை பொருந்திய மெட்ரோபாலிட்டன் அதனேசியஸ் யோஹான் 1 அவர்கள் நம்மை விட்டுக் கடந்து சென்று இரண்டு வாரங்களுக்கு மேலாகிறது, இந்த திடீர் இழப்பால் நாம் அடைந்த துக்கத்தின் மத்தியிலும், அவருடைய அயராத உழைப்பு, நம் தேவன் மீதுள்ள அன்பு மற்றும் பல ஆண்டுகளாக நம்மை வழி நடத்தியதையும் குறித்து நாம் வைத்திருக்கும் ஆழ்ந்த நன்றியையும் இதயப்பூர்வமான பாராட்டுகளையும் வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாது. I தெசலோனிக்கேயர் 4:13; பரிசுத்த பவுல் நினைவூட்டுவதைப்போல அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப்போத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை.

மேன்மை பொருந்திய மோரன் மோர் அதனேசியஸ் யோஹான் I மெட்ரோபாலிட்டன் அவர்களின் உயிர்நீத்த சரீரம் மற்றும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற இருதி சடங்கின் போது, நமது முழு திருச்சபையின் குடும்பமும் ஒன்று கூடி, நாம் நம்பமுடியாத அளவிற்கு ஒற்றுமையையும் அன்பையும் பகிர்ந்து கொண்டதை அழகாகக் வெளிகாட்டின உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்கள் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நமது அன்பிற்குரிய மெட்ரோபாலிட்டன் அதனேசியஸ் யோஹான் I அவர்களை கனம்பண்ண நீங்கள் எடுத்துக் கொண்ட நேரமும் தியாகங்களும் இதயத்தின் ஆழத்தில் தொடுவதாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருந்தது. இறுதிச் சடங்கில் பங்கு பெருவதற்கு, ஜெபித்ததும் மற்றும் தொலைதூரத்திலிருந்து பேருந்து, ரயில், வாடகை வாகனங்கள் மற்றும் பல்வேறு வழிகளில் பயணம் செய்த நம்பமுடியாத முயற்சிகள் அனைத்தும் பெறும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

நமது திருச்சபையின் மரபுகளின்படி, மே 8 ஆம் தேதி தொடங்கி, நமது திருச்சபையின் அனைத்து பேராய அலுவலகங்கள் மற்றும் திருச்சபைகளில் 40 நாள்

**பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்**
சினாட் செக்ரடேரியட்,
செயின்ட் தாமஸ் கம்யுனிடி,
திருவல்லா, கேரளா, இந்தியா 689 103
Ph: 0469 2630654
WWW.bec.org
email: info@bec.org

**பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்**

துக்கம் அனுசரிக்கப்படுகின்றது. இந்த காலகட்டத்தில், நமது அன்புக்குறிய மெட்ரோபாலிட்டன் அதனேசியஸ் யோஹான் I அவர்களின் புகைப்படம் திருச்சபைக்குள் வைக்கப்பட்டு, அவரைப் பற்றிய அன்பான நினைவுக்கான பிரார்த்தனைகள் அனுசரிக்கப்படுகின்றன. னே

**செய்யபடவேண்டிய சில முக்கியமானவைகள்:**

நாம் முன்னெடுத்துச் செல்கின்ற இவ்வேளையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நமது திருச்சபையின் சில முக்கியமான காரியங்களில் உங்கள் முழு மனதுடன் ஒத்துழைப்பை நல்க வேண்டுகிறோம்.

- **இரங்கல் கூட்டங்கள்:** ஒவ்வொரு பேராயங்களும் ஒரு பொது இரங்கல் கூட்டத்தை ஏற்பாடு செய்து, அனைத்து முக்கிய திருச்சபைத் தலைவர்கள், குறிப்பிடத்தக்க கிறிஸ்தவ ஊழியங்களில் காணப்படும் தலைவர்கள், சமூகத்தில் உள்ள முக்கிய நபர்கள், உங்கள் பகுதியின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்-எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், பிற புகழ்பெற்ற மற்றும் செல்வாக்கு மிக்க பிரமுகர்கள் மற்றும் திருச்சபையின் பற்றுதலுங்குறியவர்கள் - நமது மெட்ரோபாலிட்டன் அதனேசியஸ் யோஹான் I அவர்களின் வாழ்க்கை மற்றும் மரபுகளை நினைவுகூரவும் கௌரவிக்கவும் தக்கதாக குறிபிட்ட காலம் வரை கடைபிடிக்கபட வேண்டும்.

- **நாற்பது நாள் நினைவு ஆராதனை:** நமது அன்பிற்குரிய மெட்ரோபாலிடன் அதனேசியஸ் யோஹான் I அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், ஞாயிற்றுக்கிழமை, ஜூன் 16, 2024 அன்று, அனைத்து பேராய அலுவலகங்கள், நிறுவனங்கள் மற்றும் உலகெங்குமுள்ள திருச்சபைகளில் அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் சிறப்பு நாற்பது நாள் நினைவு ஆராதனை நடத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- **அவரது அடிச்சுவடுகளை பாதுகாத்தல்:** நமது மாண்புமிகு மெட்ரோபாலிட்டன் அவர்களின் நேசத்துக்குரிய நினைவையும் மரபையும் நினைவில் வைத்திருக்க, உங்கள் பேராய அலுவலகங்கள், நிறுவனங்கள், திருச்சபைகள் மற்றும் வீடுகளில் ஃபிரேம் செய்யப்பட்ட புகைப்படங்களைக் வைக்க உங்களை ஊக்குவிக்கிறோம். இந்தப் புகைப்படங்களின் உயர் தெளிவுத்திறன் கொண்ட டிஜிட்டல் நகல்களை அச்சிடுவதற்கும் ஃப்ரேம் செய்வதற்கும் பரிந்துரைக்கப்பட்ட தலைப்புகளுடன் உங்களுக்கு அனுப்புவோம்.

- **அடுத்த மெட்ரோபாலிட்டன் தேர்ந்தெடுப்பது:** நாற்பது நாள் நினைவுச் சேவையைத் தொடர்ந்து, பரிசுத்த சினட் பேராய கவுன்சில் ஜூன் 17,2024

**பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்**
சினாட் செக்ரடேரியட்,
செயின்ட் தாமஸ் கம்யுனிடி,
திருவல்லா, கேரளா, இந்தியா 689 103
Ph: 0469 2630654
WWW.bec.org
email: info@bec.org

**பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்**

முதல் செயின்ட் தாமஸ் திருச்சபை குட்டபுழா, P.O. திருவல்லா, கேரளா, இந்தியா இல் உள்ள திருச்சபை தலைமையகத்தில் நடைபெறும். இந்த கூட்டத்தின் போது, பரிசுத்த சினட் பேராய கவுன்சில் மற்றும், நமது திருச்சபைக்கான அடுத்த மெட்ரோபாலிட்டனை ஜெபத்துடன் தேர்ந்தெடுப்பார்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட அடுத்த மெட்ரோபாலிட்டனை நிறுவுவதற்கான காலவரிசையை அவர்கள் நிறைவேற்றுவார்கள். மேலும் திருச்சபையின் மற்ற முக்கிய நிகழ்ச்சி நிரல்களை செயல்படுத்துவது போன்ற இவை அனைத்தும் நமது அன்பான மெட்ரோபாலிட்டன் அதனேசியஸ் யோஹான் I அவர்களின் மரபுகளை கனப்படுத்தபடும் இந்த முக்கியமான சந்தர்ப்பத்திற்காக நமது விசுவாசிகள் அனைவரும் ஒன்றுபட்டு உருக்கமான மற்றும் தொடர்ச்சியான ஜெபத்தில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**நாம் ஒன்றாக ஜெபிப்போம்**

இந்த மாபெரும் மாற்றத்தினால் நாம் பயணிக்கும்போது, பின்வருவனவற்றிற்காக எங்களுடன் ஊக்கமான ஜெபத்தில் சேர உங்களை அழைக்கிறோம்:

**1. அடுத்த மெட்ரோபாலிட்டனை தேர்ந்தெடுப்பது:** கடந்த காலத்தில் பரிசுத்த திருச்சபையை வழிநடத்திய பரிசுத்த ஆவியானவர், நமது திருச்சபையை அன்போடும், தரிசனத்தோடும் மேய்க்கதக்க ஒரு பேராயரைத் தேர்ந்தெடுப்பதற்கான தெய்வீக ஞானத்தையும், விவேகத்தையும், வழிகாட்டுதலையும் பரிசுத்த பேராய திருசபை உறுப்பினர்களுக்கு வழங்குவதற்க்காக ஜெபிக்க வேண்டும்.

**2. நமது ஊழியத்தின் தொடர்ச்சியான வெற்றி:** தேவனுடைய அன்பை வார்த்தைகளிலும், செயல்களிலும் பகிர்ந்து கொள்ள நாம் முயற்சிக்கும் போது, தேவனுடைய தொடர்ச்சியான தயவு நமது முயற்சிகள் அனைத்தின் மீதும் இருப்பதற்காக ஜெபிக்க வேண்டும்.

**3. ஒற்றுமை மற்றும் ஸ்திரத்தன்மை:** தேவனுடைய அன்பில் நமது பன்முகத்தன்மையைக் கொண்டாடும் அதே வேளையில், நம் திருச்சபையானது சமூகத்தில் ஒற்றுமை , அன்பு, சமாதானம் மற்றும் ஸ்திரத்தன்மையோடு இருப்பதையும்,கீழ்ப்படிதல், ஐக்கியம் மற்றும் முழுமையான ஒத்துழைப்பைக் கொடுப்பதையும் காணலாம்.

**4.தேவனுக்கு சேவை செய்யும் இளைஞர்கள்:** நமது திருச்சபையின் சகோதர சகோதரிகளும் தேவனுடைய அழைப்புக்கு செவிசாய்த்து, பரிசுத்த திருச்சபைக்கு சேவை செய்ய நமது பேராய செமினரிகளில் பயிற்சி பெற , மற்றும் சிஸ்டர் ஆப்

**பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்**
சினாட் செக்ரடேரியட்,
செயின்ட் தாமஸ் கம்யுனிடி,
திருவல்லா, கேரளா, இந்தியா 689 103
Ph: 0469 2630654
WWW.bec.org
email: info@bec.org

**பிலிவர்ஸ் ஈஸ்டர்ன்**
சர்ச்

கிராஸ் (SOC) பயிற்சி மையங்கள், மேஜர் செமினரி (SOC) ஆகியவற்றில் பயிற்சி பெற தேர்வு செய்ய வேண்டும். (SITS).

**5. சிஸ்டர்ஸ் ஆப் கிராஸ் அர்ப்பணிப்பு மற்றும் பணிஸ்தலம் நியமனம் (SOC):** SOC சகோதரிகளின் வரவிருக்கும் அர்ப்பணிப்பு மற்றும் பணி ஸ்தல நியமனத்திற்கு தேவையான வழிகாட்டுதலையும், ஞானத்தையும் தேவன் அருளும்படியாகவும், மேலும் தேவன் அவர்களின் திறமைகளையும், அர்ப்பணிப்பையும் பயன்படுத்தி தேவைப்படுபவர்களுக்கு அவருடைய அன்பையும் செய்தியையும் கொண்டு செல்லவதற்காகவும்.

**6. பரிசுத்த சினாட்டின் உறுப்பினர்கள்:** பரிசுத்த திருச்சபையை வழிநடத்துவதற்கான பொறுப்புகளை ஜெபத்துடன் எடுத்துக்கொள்வதற்க்காகவும், பரிசுத்த திருச்சபைக்கான முக்கிய முடிவுகளை எடுப்பதற்க்காவும் தேவன் ஞானம், கிருபை,மற்றும் நல்ல ஆரோக்கியம், உணர்வு மற்றும் ஆவிக்கூரிய பெலனை அருளுவதற்க்காவும் ஜெபிக்கவும்.

பிதாவாகிய தேவனுடைய அன்பும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், பரிசுத்த ஆவியின் ஐக்கியமும் இப்போதும் என்றென்றும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

**கிறிஸ்துவில்,**

✠ **Dr. சாமுவேல் மோர் தியோபிலஸ் எப்பிஸ்கோப்பா**
**மெட்ரபாலிட்டன் லோக்கம் டெனென்ஸ்.**

ST. THOMAS NAGAR, KUTTAPUZHA P.O. BELIEVERS EASTERN CHURCH THIRUVALLA-3, KERALA